[3rd August 1966

திரு. வை. சங்கரன் : ராஜ்யத்தில் உடல் உழைப்பு வேலை செய்பவர்களுக்கு உணவின் அளவை சற்று அதிகரிக்க வேண்டியிருக்கிறது. அதை மனத்தில் கொண்டு அரசாங்கம் இந்த அளவை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. வெ. ராமையா : இந்த அளவை உயர்த்துவதற்கு இப்பொழுது ஆலோசனை இல்லை. அவர்களுக்குக் கொஞ்சம் கூடவே கொடுக்கிறோம்.

* 51 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் தேதியில் டெல்லியில் நடைபெற்ற முதல் அமைச்சர்கள் மாநாட்டில், நமது மாநிலத்திற்கு ஏழு அவுன்சு அரிசிதான் கொடுக்கவேண்டும் என்ற முடிவை நமது அரசாங்கம் ஒத்துக்கொண்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) இந்தியாவின் எந்தப் பகுதியிலும் வயது வந்தவர்களுக்குப் பங்கீட்டின் மூலம் வழங்கப்படும் அரிசியின் அளவு 200 கிராமுக்கு மேல் இருக்காது. இந்த அளவு ஒரு வாரத்திற்குத் தோராயமாக ஏழு அவுன்சு இருக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, அகில இந்தியாவுக்கும் ஏழு அவுன்ஸ் முறை என்று அந்த மகாநாட்டில் பேசப்பட்டதா ? அப்படிப் பேசப்பட்டிருந்தால், நமது மாகாணத்திற்கு ஏழு அவுன்ஸ் போதுமா? அரசாங்கம் இதைப் பரிசீலனை செய்ததா? போதாததற்கு என்ன நடவடிக்கை எடுத்தது?

கனம் திரு. வெ. ராமையா : ஏழு அவுன்ஸ் மட்டும் அல்ல. கோதுமையும் மற்ற பொருள்களும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : பங்கீட்டுமுறை இருக்கும் மாவட்டங்களில் நெல் உற்பத்தி ஆகக் கூடிய மாவட்டங்களுக்கும் ஏழு அவுன்சு கொடுப்பது போல் உற்பத்தி ஆகாத மாவட்டங்களுக்கும், அதாவது என்னுடைய நீலகிரி ஜில்லாவுக்கும் ஏழு அவுன்ஸ் கொடுக்கப்படுகிறது. எங்களுக்கு மார்க்கெட்டில் அரிசி கிடைக்காத காரணத்தினால், அந்த மாதிரி நெல் விளையாத மாவட்டங்களுக்கு உணவின் அளவை உயர்த்துவதற்கு அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா : கோதுமை, மைதா போன்ற மற்ற உணவுப் பொருள்களையும் சேர்த்துக் கொடுக்கிறோம்.

திரு. ஜே. மாதா கவுடர் : மற்ற உணவுப் பொருள்கள் கொடுத்தாலும் கூட, நெல் விளையக்கூடிய ஜில்லாவுக்கும், நெல் விளையாத ஜில்லாவுக்கும் ஒரே மாதிரியாக விநியோகம் செய்வது சரியல்ல, நெல் விளையாத இடங்களில் உணவுப் பொருளின் அளவை சற்று உயர்த்திக்கொடுப்பதற்கு ஏன் தயக்கம் இருக்கிறது?

3rd August 1966]

கனம் திரு. வெ. ராமைய்யா : நீலகிரி ஜில்லாவின் நிலை விசேஷமானது என்ற காரணத்தினால், அங்கு கார்டு முறை ஏற்படுத்தி, அங்கு இருக்கக்கூடிய அத்தனை பேர்களுக்கும் அந்த முறையின் கீழ் உணவுப் பொருள்கள் கிடைக்கும்படி செய்யப்பட்டிருக்கிறது. மற்ற மாவட்டங்களில் அந்த நிலை இல்லை.

திரு. எம். எஸ். செல்வராஜன் : திருநெல்வேலி ஜில்லாவில் கிராமப் பகுதிகளில் நபர் ஒன்றுக்கு வாரத்திற்கு 1,200 கிராம் கொடுக்கப்பட்டு வந்தது, இப்பொழுது 1,000 கிராமாகக் குறைத்துத் தான் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் தாக்கீது அனுப்பியது உண்மையா? அப்படியானால் அதற்குரிய காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. செ. மாதவன் : 1966-ல் 18 அவுன்ஸ் கொடுக்கப்படும் என்று ஒரு புள்ளி விவரத்தை ஒரு கட்டுரை மூலம் முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள் . அது ஏழு அவுன்ஸ் ஆனதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : இப்பொழுது இருக்கக்கூடியது இந்த ராஜ்யத்திற்கு மட்டுமல்ல. இந்தியா பூராவையும் மனத்தில் கொண்டு, இருக்கக்கூடிய பற்றுக்குறையைச் சமாளிப்பதற்கு முதல் அமைச்சர்கள் மகாநாட்டில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : நமது மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் எவ்வளவு? அது நமது மாநிலத்திற்குப் போதுமான அளவிற்கு இருக்கிறதா? அதிகமாக இருந்தால், ஏழு அவுன்ஸுக்கு மேல் உயர்த்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. வெ. ராமைய்யா : மாநிலத்தில் உற்பத்தியாகக்கூடிய நெல் எவ்வளவு என்ற புள்ளிவிவரம் என்னிடத்தில் இப்பொழுது இல்லாவிட்டாலும், அதைக் கொடுக்க முடியும். உற்பத்தியாகக்கூடிய நெல் பூராவும் நமது மாநிலத்திற்கே பயன்படவேண்டும் என்பது இன்றைக்கு இருக்கக்கூடிய அரசியல் அமைப்புக்கும், நாட்டில் இருக்கக்கூடிய ஒன்றுபட்ட நிலைக்கும் உகந்தது அல்ல.

திரு. மீ. கலியாணசுந்தரம் : நம்முடைய ராஜ்யத்தில் உற்பத்தி ஆவதை நம்முடைய ராஜ்யத்திற்கே வைத்துக்கொள்ள முடியாது, பிற ராஜ்யங்களுக்கும் கொடுக்கவேண்டும் என்ற பெருந்தன்மை நமக்கு இருக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஒத்துக்கொள்கிறேன். நாட்டில் 16 அவுன்ஸ் 'பெர் காபிடா அவைலபிலிடி' என்று மத்திய அரசாங்கம் வெளியிட்டிருக்கக்கூடிய அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது, இப்பொழுது ஏழு அவுன்ஸுக்கு மேல் கொடுக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா?

[3rd August 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : நம்முடைய ராஜ்யத்தில் இருக்கக்கூடிய நிலவரத்தைப்பற்றி விவரம் சொல்ல வேண்டுமென்றால் நம் இராஜ்யத்தில் இருக்கக்கூடிய எல்லா மக்களுக்கும் உற்பத்தி ஆகக்கூடிய உணவு பூராவையும் வாங்கிப் பங்கிட்டுக் கொடுக்கவில்லை. சென்னை, கோயம்பத்தூர், நீலகிரி போன்ற இடங்களில் எல்லோருக்கும் உணவு விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். மற்ற இடங்களில் மார்க்கெட்டபிள் சர்ப்ளஸை வாங்கி, அவர்கள் எவ்வளவு கொடுக்க முடியுமோ அதை வாங்கி, நெல் உற்பத்தி செய்யாத இடங்களில் விநியோகம் செய்து கொண்டிருக்கிறோம். அப்படிப் பார்த்தால், நெல் உற்பத்தியாகக்கூடிய தஞ்சை, தென்னாற்காடு, வடாற்காடு இது போன்ற ஜில்லாக்களுக்கு நாம் விநியோகம் செய்வது மிகக் குறைவு.

*52 **கேள்வி.—திரு. கரு. சிமைச்சாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகத்தில் சட்டபூர்வ ரேஷன் எத்தனை மாவட்டங்களில் அமல் செய்யப்படுகிறது?

(இ) அதன் விபரம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) Statutory rationing has been introduced in the City of Madras, in the Municipal Town of Coimbatore and in Singanallur and Perur Panchayat Union areas of Coimbatore District.

*53 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி** : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ரேஷன் முறை அமலுக்கு வந்ததிலிருந்து சென்னை, கோயம்பத்தூர் ஆகிய இரு நகரங்களுக்கு முறையே தேவையான அரிசி, கோதுமை அளவு என்ன?

(இ) மேற்படி இரு நகரங்களுக்கும் முறையே எத்தனை குடும்பங்களுக்கு ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டன?

(உ) ஓட்டல், விடுதிகள், ஆகியவைகளுக்கு எந்த அடிப்படையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன ?

(எ) ரேஷன் கார்டுகளுக்கு விண்ணப்பம் கோரி வந்த மனுக்களில் இதுவரை பைசலாகாமல் இருப்பவை எத்தனை?

கனம் திரு. வெ. ராமைய்யா :

		சென்னை.	கோயம்பத்தூர்.
(அ) உணவுப் பங்கீடு செயலுக்கு வந்தால், சென்னையிலும், கோயம்பத்தூரிலும் ஒரு வாரத்திற்குத் தேவைப்படும் அரிசி, கோதுமை (டன் அளவில்).	அரிசி	4,181	1,300
	கோதுமை	612	325